Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 15 சனிக்கிழமை (31-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 270

# நாடாளுமன்றக் கூட்டத்தை பிரேமா இடைநிறுத்தி வைப்பு!

## மணலாறில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஆக. 30

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை வான் தாக்குதல்கள் இடம்பெற்றன. கொக்குத்தொடுவாய், நாயாறு காட்டுப் பகுதிகளில் 4 பொம்மர்களும், இரண்டு அவ்ரோக்களும், ஒரு ஹெலியும் காலை 6 மணி முதல் இரவு 7.30 மணிவரை குண்டு வீச்சுத்தாக்குதல்களை மேற்கொண்டன.

## அதிருப்தியாளர்களைச் 'சரிக்கட்ட' கூட்ட அமர்வை 3 வாரம் பின்போட்டார்

கொழும்பு, ஆக. 31

தனக்கு எதிராக கொண்டுவரப்பட்டிருக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படாமல் தடை செய்வதற்காக, நாடாளுமன்றக் கூட்டத் தொடரை மூன்று வாரங்களுக்கு தள்ளிவைக்கும் திடீர் உத்தரவு ஒன்றை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா நேற்றுப் பிறப்பித்தார்.

ஆளும் கட்சிக்குள் தமக்கு எதிராகத் திரும்பியிருக்கும் அதிருப்தியாளர்களை, சமாளித்து, சரிக்கட்டி, ஒழுங்குபடுத்துவதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாலேயே அவர் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்தார் என்று அவதானிகள் தெரிவித்தனர்.

நாடாளுமன்றம் எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கூடவிருந்தது.

அப்போது திரு. பிரேமதாஸாவை ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கக் கோரும் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் நேற்று திரு. பிரேமதாஸா நாடாளுமன்றக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் பல அமைச்சர்கள் இராஜினாமா?

கொழும்பு. ஆக 31

அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலி, பிரேமச்சந்திரா ஆகியோரைப் பின்பற்றி மேலும் பல அமைச்சர்கள், ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இராஜினாமாச் செய்யக்கூடும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் அமைச்சரவையிலிருந்து ஒன்பது அமைச்சர்கள் இராஜினாமாச் செய்திருப்பதாக இந்திய வானொலி நேற்று நண்பகல் அறிவித்தது. ஆனால் மேலதிக விவரங்களை அது வெளியிடவில்லை. (உ-த-எ)

## இப்போதும் கூட பிரேமா புலிகளுடன் பேச தயாராம்!

கொழும்பு, ஆக. 31

"இப்போது கூட பேச்சுவார்த்தை, நல்லிணக்கம், புரிந்துணர்வு என்ற அடிப்படையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண நான் தயாராக இருக்கிறேன்."

— இவ்வாறு கூறினார் ஜனாதிபதி பிரேமதாஸா.

தம்மை பதவி நீக்கம் செய்யக் கோரும் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், கலாவெவ விஜித்தபுர ரஜமகா விகாரையில் நடைபெற்ற வழிபடுவோர் கூட்டத்தில்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## 24 குற்றச்சாட்டுகள்

கொழும்பு, ஆக. 31

ஜனாதிபதி பிரேமதாஸாவை பதவி நீக்கக் கோரும் பிரேரணையில் அவருக்கு எதிராகப் பல்வேறு கிரிமினல் குற்றங்கள் உட்பட 24 குற்றச் சாட்டுகள் தெரிவிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

★ அதிகாரத் துஷ்பிரயோகம்.

★ சட்ட விரோதமாக காணிகள் விற்பனை செய்தது சம்பந்தமான மோசடி.

★ வடக்கு, கிழக்குப் பிரச்சினையை தீர்ப்பதில் தோல்கண்டமை.

★ பத்திரிகையாளர் திரு. டி. சொய்சா கொலையுடன் தொடர்பு பட்டது.

★ நட்பு நாடுகளைப் புறக்கணித்தது.

★ எதிர்க் கட்சியினரின்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அதிருப்தியாளர் குழுவுக்கு இந்தியா மறைமுக ஆதரவு?

கொழும்பு, ஆக. 31

ஆளும் ஐ. தே. கட்சியில் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருக்கும் "அதிருப்தி"க் குழுவினருக்கு பின்னணியில் இந்திய ஆதரவு கிடைத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்தியாவுடன் நல்லுறவைப் பேணுவதில் அதிக அக்கறை காட்டாதவர் ஜனாதிபதி பிரேமதாஸா. அவருக்கு எதிராக குரல் எழுப்பியிருக்கும் அதிருப்தியாளர் குழுவில் முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா முக்கிய இடம் வகிக்கிறார். அவர் இந்தியாவின் 'செல்லப்பிள்ளை' என்று கருதப்பட்டவர்.

ஸ்ரீலங்கா அரசில் இந்திய ஆதரவுச் சக்திகளின் கையை ஓங்கச் செய்யவும்—

இந்திய எதிர்ப்புடைய அரசியல் வாதிகளின் செல்வாக்கை உடைக்கவும் ஆளும் கட்சிக்குள் அதிருப்தியாளர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாஸா சர்வாதிகாரி லலித் குற்றச்சாட்டு!

கொழும்பு, ஆக. 31

"ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா ஒரு சர்வாதிகாரி."

—பதவி விலகிய அமைச்சர் லலித் அத்துலத் முதலி இவ்வாறு கூறினார்.

பதவி விலகிய மற்றைய அமைச்சரான திரு. பிரேமச்சந்திரா, முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்கா ஆகியோர் சகிதம் நேற்றுக் காலை கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து, பிரதமர் தலைமையிலான ஆட்சிமுறையைக் கொண்டு வரத் தாம் முயற்சி எடுக்கப் போவதாக திரு. லலித் அத்துலத் முதலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அதிருப்தியாளர் குழுவினர் லலித் தலைமையை ஏற்பர்?

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய, மூத்த உறுப்பினர்கள் பலர் பிரேமதாஸாவின் தலைமையை விட்டுப் பிரிந்து முன்னாள் அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியின் தலைமையை ஏற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

லண்டனிலிருந்து வெளியாகும் "சிறிலங்கா மொனிட்டர்" பத்திரிகையின் ஆசிரியர் திரு. மல்கம் ரோஜர்ஸ், கொழும்புத் தகவல்களை ஆதாரம் காட்டி இத்தகவலை வெளியிட்டார்.

1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெரும் எண்ணிக்கையில் ஆளும் கட்சி அங்கத்தவர்கள் கட்சித் தலைமைக்கு எதிராக மாறியிருப்பது இதுவே முதல் தடவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. [உ-த]

## விவரம் விளங்காமல் ஒப்பமிட்ட எம். பிக்கள்!

ஜனாதிபதி பிரேமதாஸாவை பதவி நீக்கம் செய்யக் கோரும் பிரேரணையை, நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கக் கூடாது என்று கோரும் பிரேரணை என்று தவறுதலாக விளங்கிக் கொண்டு அதில் கையொப்பமிட்டார்களாம் சில எம்.பிக்கள்.

இவ்வாறு கையொப்பமிட்ட 3 நாடாளுமன்ற உறுப்பினர் அந்தப் பிரேரணைக்கான முன்னறிவித்தல் மனுவிலிருந்து தமது பெயர்களை நீக்குமாறு சபாநாயகரிடம் இப்போது விண்ணப்பித்திருக்கிறார்கள் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

கேகாலை மாவட்ட உறுப்பினர்களான திரு. தர்மதேவ ஜயசிங்க, வின்சன்ட் ஜெயவர்த்தன மற்றும் மாத்தளை மாவட்ட உறுப்பினர் திரு. பி. ஜி. ஜினதாஸ ஆகியோரே இவ்வாறு கேட்டிருக்கிறார்களாம்.

## சிறிமாவோ நம்பிக்கை

கொழும்பு, ஆக. 31

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணையை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளினால் நிறைவேற்ற முடியும்.

—இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

நேற்று கொழும்பில் பத்திரிகையாளரிடம் பேசிய அவர்—

"இது ஜனாதிபதிக்கு எதிரான போரல்ல. ஒரு தனி மனித சர்வாதிகாரத்தை ஒடுக்க ஐ. தே. க.வுடன் இணைந்து நடத்தப்படும் போர்" என்றார். [உ-த]

## பௌத்த பீடாதிபதிகள் பிரேமாவுக்கு ஆதரவு

கொழும்பு, ஆக. 31

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு பௌத்த மத பீடங்கள் பலவற்றின் தலைவர்கள் ஆதரவு தெரிவித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் வண. ரம்புக்க விபாஸி தேரர், அஸ்கிரிய பீடாதிபதிவண. பலிப்பானே சந்திரானந்ததேரர், அமரபுர பீடாதிபதி வண. தம்மானந்த தேரர் உட்பட பல பௌத்த பீடங்களின் தலைவர்கள் பிரேமாவுக்கு ஆதரவாக பகிரங்க அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றனராம். கண்டி [illegible] மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயவர்த்தனாவும் திரு. பிரேமதாஸாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். (உ-த)

## மண்டைதீவு பகுதி நோக்கி பீரங்கிப் படகு தாக்குதல்

யாழ்ப்பாணம், குடாக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு முதல் ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல் ஒன்று நங்கூரமிட்டிருந்தது.

அதை அடுத்து நேற்றுக் காலை பண்ணையூர், மண்டைதீவுக் கடற் பகுதிகளில் சில பீரங்கிப் படகுகள் ரோந்தில் ஈடுபட்டன.

திடீரென காலை 7. 10 மணியளவில் அந்தப் படகுகளிலிருந்து மண்டைதீவுப் பகுதியை நோக்கி பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இச்சம்பவத்தில் மண்டைதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முடியப்பு யோகராணி [44 வயது] அவரது மகள் மு. பவளம் [23வயது] ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

பீரங்கி வேட்டுக்களினால் சில வீடுகளும் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-3-15-51-30]

## பிரேமாவுக்கு எதிரான சதி: சூத்திரதாரி காமினியாம்

### 'இந்து' நாளிதழ் தகவல்

கொழும்பு, ஆக. 31

ஜனாதிபதி பிரேமதாஸவை பதவியில் இருந்து அகற்றக் கோரும் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு முன்னின்று செயற்பட்டவர் முன்னாள் அமைச்சரும் தற்போது ஐ.தே.க. எம்,பியாக இருப்பவருமான திரு. காமினி திஸநாயக்கா ஆவார்.

நேற்று வெளியான 'இந்து' நாளிதழ் தனது கொழும்புச் செய்தியாளரை ஆதாரம் காட்டி இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

திரு.காமினி திஸநாயக்கா, முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின நெருங்கிய சகா என்றும் அப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

## புலிகள்-அரசு இடையிலான பேச்சுக்கு சுவிஸ் ஆர்வம்!

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்காண்பதற்கான பேச்சுக்களை நடத்துவதற்கு சுவிற்ஸர்லாந்து அரசு ஆர்வமாகவுள்ளதாக அந்த நாட்டு மூத்த அதிகாரி ஒருவர் இலங்கை அரசிடமும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடமும் தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி. இத்தகவலை நேற்றிரவு வெளியிட்டது.

அந்தப் பிரதிநிதி இந்த மாத ஆரம்பத்தில் இலங்கைக்குச் சென்று அங்கு அரசுப் பிரதிநிதிகளுடனும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தி தமது நிலைப்பாட்டை விளக்கியதாகவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

கத்தோலிக்க, 49 வயதான A/L படித்த, நிறமும், இளமையான தோற்றமுடைய, சுகதேகியான, விவாகரத்தான, பொறுப்புக்களற்ற பெண்ணுக்கு மணமகன் தேவை. பெறுமதிமிக்க வீடும், பணமும், நகையும் சீதனமாக தரப்படும். பொறுப்புக்கள் அற்றவர்கள் விரும்பத்தக்கது. இல. 346, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(17960)

### வைத்திய சேவை

Dr. அல்போன்ஸ் அத்தனாசியார் பண்டத்தரிப்பில் 18 - 8 - 91 தொடக்கம் திரும்பவும் தமது வைத்திய சேவையை ஆரம்பித்திருக்கிறார். (17981)

### G. C. E. A/L 91

வர்த்தகம், பொருளியல் ஆகியவற்றின் 91 ஆம் ஆண்டுக்குரிய வினாத்தாள்கள் பெற்றுக்கொள்ளலாம். அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-0433)

## ஓராண்டு நினைவு தினம்

அப்பையா கமலலட்சுமி

மறைவு: 31 - 08 - 1990

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சட்டத்தரணி C. ஆறுமுகம்
குடும்பத்தினர்.

பிரக்கிராசியார் வளவு,
நந்தாவில், கொக்குவில். (17978)

## "A" LEVEL CENTRE
## உயர்தராதரக் கல்வி நிலையம்,

பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

### 92 பௌதிகவியல்

✶ புலம் ✶

ஆரம்பம்: 1 - 9 - 1991 Sun. 11-15 — 12-15
Sat. & Sun. 11-15 — 12-15

ஆசிரியர்:- திரு. சௌந்தி B. Sc [Hons]

[சி-0427]


அரசாங்க சேவையிலும், மாகாண அரசாங்க சேவையிலும்
எழுதுனர் தரங்களுக்கு அமைய
அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான

# போட்டிப் பரீட்சை-1991

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள திணைக்களங்களில் எழுதுனர் தரங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு அமைய அடிப்படையில் நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் / ஆணையாளரால் நடத்தப்படும் எழுத்து மூலமான பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து திறமை அடிப்படையிலும் இன விகிதாசாரப் பிரகாரமும், பொருத்தமானவர்கள் அரசாங்க சேவையிலும், மாகாண சேவையிலும் உள்ள பதவிகளுக்கு அமைய, அடிப்படையில் நியமனம் செய்வதற்குத் தெரிவுசெய்யப்படுவர். இப் பரீட்சை யாழ். மாவட்டத்தில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைப் பெறுபேறுகளின்படி எல்லா வெற்றிடங்களையுமோ அல்லது எவற்றையேனும் நிரப்பாது விடும் அதிகாரம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்குண்டு. இந்நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட மாட்டா. நிரந்தர நியமனம் பெற விரும்புவோர் அகில இலங்கை ரீதியில் நடைபெறும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைய வேண்டும்.

3. யாழ்ப்பாண மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மாத்திரமே இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். பின்வரும் ஆவணங்கள் மூலம் விண்ணப்பதாரர் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் என்று கருதப்படுவர்.

(1) விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின்படி அவர் யாழ். மாவட்டத்தில் பிறந்தவரென்று குறிப்பிட்டிருத்தல்வேண்டும்.

அல்லது,

(2) தேர்தல் இடாப்பில் அவருடைய பெயர் இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் க. பொ. த [சாதாரணம்] அல்லது தே. பொ. க. சா. பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலையில் கல்வி பயின்று சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்தைப் போல் தயாரித்து விண்ணப்பிக்க வேண்டும்.

4. தகைமைகள்:-

எண்கணிதம் / கணிதம் / வர்த்தக எண்கணிதம், மொழி/ இலக்கியம் ஆகியவற்றில் திறமைச் சித்திகளையும் உள்ளடக்கி 4 திறமைச் சித்திகளுடன் அல்லது 4B தரச் சித்திகளுடன் 6 பாடங்களில் கல்வி பொதுத் தராதர [சாதாரண தரப்] பரீட்சை/தேசிய பொதுக் கல்வி சான்றிதழ்ப் பரீட்சையில் சித்தி (மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் 4 திறமைச் சித்திகளுடன் அல்லது 4B தரச் சித்திகளுடன் ஒரே தடவையில் 5க்கு குறையாத பாடங்களில் சித்தியடைந்த பின் இரண்டாம் தடவையில் 6 ஆம் பாடத்தில் சித்தியடைந்து பரீட்சையைப் பூர்த்தி செய்தவர்களும் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவர்களாவர்).

விண்ணப்பதாரிகள் இலங்கை பிரஜைகளாய் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் நல்ல தேகாரோக்கியமும், நற்குணமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. பரீட்சைத் திட்டம்:-

அபேட்சகர்கள் பரீட்சையில் இரண்டு வினாப்பத்திரங்களுக்கு தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

(i) மொழித் தேர்ச்சி (ஒன்றரை மணித்தியாலம்) பல்விருப்பு தேர்வுப்புறப் பொருள்சார் வகை வினாத்தாள் ஒன்று. இது தொடர்புடைய மொழித் தேர்ச்சிகளை பரீட்சிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

(ii) உளச்சார்புச் சோதனை (ஒன்றரை மணித்தியாலம், பல்விருப்புத் தேர்வுப் புறப்பொருள்சார் வகை வினாத்தாள், இது கணித உளச்சார்புகளையும் பொது விவேகத்தையும், பரீட்சிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட பொது வினாத்தாள் ஆகும்.
இப் பரீட்சை மூன்று மொழி மூலகங்களிலும் நடத்தப்படும். (தமிழ் / ஆங்கிலம் / சிங்களம)

6. பரீட்சைக் கட்டணங்கள்:-

விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணமாக யாழ் அரசாங்க அதிபரென ரூபா 100/-க்கான காசுக்கட்டளையை அல்லது யாழ், செயலகத்திலோ அல்லது யாழ். செயலகத்தினால் குறிக்கப்பட்ட வங்கியொன்றிலோ பணமாக கட்டிய பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். இப் பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப் படமாட்டாது.

7. சம்பளத் திட்டம்:-

வேலை செய்யும் நாளுக்கு ரூபா 55/20 என்ற விகிதத்தில் வேதனமும், அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

8. விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாங்க சேவையிலும், மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம்" என்பதைக் குறிப்பிடவும்.

அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்தில் தங்களுடைய அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர்.

பூரண விவரங்களைக் கொண்டிராத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தில் உள்ள அபேட்சகரின் ஒப்பம் பின்வருவோர்களில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு படைத்தாங்கு சேவைகளின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் பிரிவில் அரசாங்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட அதிகாரி ஆண்டொன்றுக்கு 24,000/- ரூபாவிற்கு குறையாத திரட்டிய சம்பளம் பெறுபவரும் அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவருமான ஒருவர்.

9. விண்ணப்பம் பின்வரும் முகவரிக்கு 1991 செப்டம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்க அதிபர்/மாவட்ட ஆணையாளர்,
கச்சேரி,
யாழ்ப்பாணம்.

பரீட்சைத் திகதி பின்னர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும். அரசாங்க அதிபரின் பெயருக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. இந்த அறிவித்தலில் கொடுக்கப்படாத எந்த விடயமும் நியமிப்பு அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும்.

கா. மாணிக்கவாசகர்
யாழ். அரசாங்க அதிபரும்,
மாவட்ட ஆணையாளரும்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

அரசாங்க சேவையிலும், மாகாண அரசாங்க
சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கு
அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான

## போட்டிப் பரீட்சை - 1991

1. (i) முழுப்பெயர்:-
(ii) முதலெழுத்துக்களுடன் பெயர்
(திரு / திருமதி / செல்வி)
2. நிரந்தர முகவரி:-
3. பால்:- (ஆண்/ பெண்)
4. நீர் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி:- [தமிழ் / ஆங்கிலம் / சிங்களம்]
5. இனம்: -
இலங்கைத் தமிழர்/சிங்களவர் / முஸ்லிம்கள் / இந்தியத் தமிழர் / பறங்கியர் / மலாயர் /பிறர்
6. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-
7. (அ) பிறந்த திகதி:-
வருடம் — மாதம் — திகதி—
(ஆ) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதியன்று 30 - 09 - 1991 உமது வயது:-
வருடம் — மாதம் — நாள்—
8. கல்வித்தகைமைகள்:-
(அ) க. பொ. த. (சாதாரணம்) / தே. பொ. க. சான்றிதழ் பரீட்சை.

| பரீட்சையின் பெயர் மாதம், வருடம். | பரீட்சை நிலையம் | பாடம் | தரம் | சுட்-இலக்கம் |
|---|---|---|---|---|
| [1] | | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8. | | |
| [2] | | | | |

(ஆ) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையின் விவரம்:-

| பரீட்சையின் பெயர் மாதம், வருடம். | பாடம் | தரம் | சுட்-இலக்கம் |
|---|---|---|---|
| | 1.<br>2.<br>3.<br>4. | | |

9. பிறந்த இடமும், மாவட்டமும்:-
10. ஆரம்பக் கல்வி தொடக்கம் க. பொ. த. (சாதாரண) தே. பொ. க. சா. பரீட்சை வரை கல்வி கற்ற பாடசாலையின் பெயர்:-
11. தேர்தல் இடாப்பில் விண்ணப்பதாரரின் பெயர் பதியப்பட்டுள்ளதாயின் அத்தொகுதியின் பெயர்:-
12. ஏனைய தகைமைகள்:-
13. நீதிமன்றத்தில் ஏதாவது குற்றத்திற்காக உமக்குக் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா? ஆம்/இல்லை (ஆம் என்றால் விவரங்களைக் குறிப்பிடவும்)
14. விண்ணப்பதாரியின் உறுதி மொழி:-
(அ) எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் இந்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் உண்மையானவை என்று உறுதிப்படுத்துகின்றேன்.
(ஆ) என்னால் வெளிப்படுத்தப்பட்ட விவரங்கள் பொய்யானவையெனக் கண்டுபிடிக்கப்பட்டால் ஆட்சேர்ப்பின் முன் / ஆட்சேர்ப்பின் பின் நான் தகைமையற்றவராக கொள்ளப்படலாம் / சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதை நான் அறிவேன்.
(இ) இப்பரீட்சையின் பிரமாணங்களுக்கமைந்து நடக்க நான் இணங்குகின்றேன்
15. கொடுப்பனவு காசுக் கட்டளை அல்லது பற்றுச் சீட்டு இலக்கம் (பற்றுச் சீட்டு அல்லது காசுக் கட்டளையை இணைக்கவும்)

.........................................
விண்ணப்பதாரியின் ஒப்பம்.

திகதி:-

**விண்ணப்பதாரியின் ஒப்பம் சம்பந்தமான உறுதிமொழி.**

இவ்விண்ணப்பத்தை அனுப்பும் ........................ என்பவரைத் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரியும் என்றும், என் முன்னிலையில் 1991 ............ ஆம் திகதி அவர் இதில் ஒப்பமிட்டார் என்றும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

.........................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
பதவிமுத்திரை.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்:-
பதவி :-
முகவரி:-
திகதி :-

[சி 0399]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பின்னணிச் சக்திகள்

ஜனாதிபதி திரு. பிரேமதாசாவைப் பதவி நீக்கம் செய்யக் கோரும் பிரேரணை விவகாரம் மிக இரகசியமாகக் கருக்கட்டி உருப்பெற்றிருக்கிறது! மின்னாமல் முழங்காமல் வந்த பெருமழை போல வந்து அது தென்னிலங்கையை அரசியல் வெள்ளத்திற்குள் மூழ்கடித்துள்ளது!!

திரு. பிரேமதாசாவை பதவி இறக்கும் இந்த நாடகத்தில் பல சக்திகள் திரை மறைவில் நின்று கருமம் ஆற்றியுள்ளன. இது திடீரெனத் தீட்டப்பட்ட ஒன்றாகத் தெரியவில்லை.

திரு. பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்தில் இருந்தே, அவரது ஒவ்வொரு நடவடிக்கையும் கழுகுக் கண்ணுடன் அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால் தான் அவர் மீதான குற்றச்சாட்டுகள் மிக நுணுக்கமான விவரங்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பிரேமதாசா பிரதமராகப் பதவி வகித்தவர். எனினும் அவருக்குப் பெரும் முக்கியத்துவம் எதுவும் கொடுக்காமல் திரு. காமினி திசநாயக்காவையும், திரு. லலித் அத்துலத்முதலியையுமே திரு. ஜே. ஆர். தனது வலது - இடது கரங்களுக்குச் சமமாகச் சீராட்டிப் பாராட்டி முதன்மைப்படுத்தி வந்தார்.

எனினும் ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளரை நியமிக்கும் போது பிரேமதாசாவுக்கே இடம் கொடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கட்சியின் அடிமட்டத்திலிருந்து பிரேமதாசாவுக்கே கூடுதல் ஆதரவு இருந்ததால் ஜே. ஆர். தமது ''செல்லப்பிள்ளைகளை'' முன்னுக்குக் கொண்டுவர முடியவில்லை.

தருணம் பார்த்து தட்டி விழுத்தும் நோக்கத்துடன் காமினியும், லலித்தும் பிரேமதாசாவின் கீழ் பணி புரியச் சம்மதித்தனர். எனினும் அவர்களுக்கு உரிய இடம் கிடைக்கவில்லை. காமினி விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டார்!

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு உண்டாவதற்கு தெரிவுக் குழுவை நியமிப்பதில் சபாநாயகர் முகம்மது பின் தள்ளப்பட்டார். திருமதி பண்டாரநாயக்கா சபாநாயகரைச் சந்தித்து முகம்மது தலைமையிலேயே தெரிவுக்குழு ஒன்றை நிறுவக் கேட்டிருந்தார். சபாநாயகரும் அதற்குச் சம்மதித்திருந்தார். ஆனால் அரசியல் லாபங்கள் சிலவற்றைக் கருதி பிரேமதாசா, மங்கள முனசிங்காவையே தலைவராக நியமிக்க வேண்டும் என்ற முடிவை சபாநாயகர் மீது திணித்தார்.

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் முகமதுவின் மகன் பின் தள்ளப்பட்டு, பிரேமதாசாவின் ஆதரவாளர் இரத்தினசிறி ராஜபக்ச முன்னுக்குக் கொண்டு வரப்பட்டது தெரிந்ததே.

இவ்வருட மத்தியில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஐ. தே. க. வென்றது. சுதந்திரக் கட்சி இப்போது தலைமைப் பதவிப் போட்டியால், உட்பூசலில் சிக்கிச் சீரழிகிறது. இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி பிரேமதாசா நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டால் ஆபத்து என்று சிறிமாவோ உணர்ந்திருப்பார். அதனைத் தடுக்க இப்படி ஒரு பிரேரணையே தக்க வழி என்று அரசியல் சட்ட நிபுணர்கள் ஆலோசனை கூறியிருப்பார்கள்.

இந்தச் சக்திகள் யாவும், இப்போது தாக்கலாகியிருக்கும் பதவி நீக்கப் பிரேரணைக்குப் பின்னால் ஒன்று சேர்ந்து திட்டமிட்டிருக்கலாம் அல்லவா?

## ஓமந்தையில் பொதுமகன் மரணம்:

# புலிகள் உறுப்பினருக்கு நேற்று மரண தண்டனை

ஓமந்தையில் பொதுமகனான திரு. நவரத்தினம் [50 வயது] தாக்கப்பட்டு மரணமான சம்பவம் தொடர்பாக, விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரான சுதன் என்பவருக்கு நேற்று வவுனியாப் பகுதியில் வைத்து மரண தண்டனை வழங்கப்பட்டது.

கடந்த 23 ஆம் திகதி ''பிரயாண பேருந்தில் இடம் பிடிப்பதில்'' ஏற்பட்ட வாக்குவாதம் தாக்குதல் நடவடிக்கையாக மாறி, அச்சம்பவத்தில் மேற்படி பொதுமகன் மரணமானார் என்பது தெரிந்ததே.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட புலிகளின் ஆதரவாளர் எனக் கூறப்படும் மற்றொருவருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக புலிகள் விடுத்துள்ள குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அடாவடித்தனமான நடவடிக்கைகளில் எமது உறுப்பினர்கள் ஈடுபடுவதை நாம் அனுமதிக்கப்போவதில்லை.

தமிழீழ மக்களின் விடிவுக்காக தம்முயிரைக் கொடுத்த ஆயிரக்கணக்கான போராளிகளுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நடந்துகொள்ளும் சுதன் போன்ற ஒரு சிலரது நடவடிக்கைக்காக நாம் வெட்கப்படுகிறோம்; வேதனைப் படுகிறோம். எமது மக்கள் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்கிறோம். குறிப்பாக திரு. நவரத்தினம் அவர்களது குடும்பத்தினரின் துயரத்தில் பங்கு கொண்டு மன்னிப்புக் கேட்கிறோம்—என்று உள்ளது. (ஒ)

## போலந்து அரசு இராஜினாமா!

போலந்து, ஆக. 31

போலந்து நாட்டின் அரசாங்கம் நேற்று இராஜினாமாச் செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீரவணக்கம்

யாழ்ப்பாணம், ஆக. 31

மணலாறுப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த விபத்துச் சம்பவம் ஒன்றில் அஜந்தன் (மதியாபரணம் தவகாந்தன் — அரியாலை) மரணமானார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். [ஒ]

## உற்சவ கால நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஆக. 31

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடக்கும் இசை சமய அரங்குகளில் கார்த்திகைத் திருவிழாவான இன்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:-

ஆலய முன்றலில் உள்ள நாவலர் மணி மண்டபத்தில் — சங்கீதபூஷணம் எஸ். கணபதிப்பிள்ளையின் இன்னிசைக் கச்சேரி.

கம்பன் கோட்டத்தில்— திரு. எஸ். கேதீஸ்வரன், ரஜி குழுவினரின் நாதஸ்வர இசை.

நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் — திரு. ந. சிவசண்முகமூர்த்தி நடத்தும் ''கந்தரனுபூதி'' கதாப்பிரசங்கம்.

மேற்கு வீதி பிள்ளையார் கோவில் மண்டபத்தில்— கானகதாவாரிதி வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தும் இராமாயணத் தொடர் விதிவுரையில் ''சடாயுமுக்தி''. [அ-126-30]

## பாவற்குளத்தில் மோதல் சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக. 31

வவுனியா மாவட்டம், பாவற்குளம், பூவரசந்துலாப் பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை 6 மணியளவில் மோதல் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகள் போராளிகள் லெப்டினன்ட் குமார் (வைரவப் புளியங்குளம்), சுசி (பாவற்குளம்) ஆகியோர் வீரமரணமடைந்தனர். [ஒ-3]

## கைது

மொஸ்கோ, ஆக. 31

சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவ்விற்கு எதிரான சதி முயற்சியில் பங்கு கொண்டதாகக் கூறப்படும் சோவியத் நாடாளுமன்றின் முன்னாள் சபாநாயகர் திரு. அனடொலிலுக்கிணேவ் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

திடீர் புரட்சியை அடுத்து அவர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார்.

## கிளிநொச்சியில் ஹெலி தாக்கு

கிளிநொச்சி, ஆக. 31

கிளிநொச்சி 5 ஆம் வாய்க்கால் பகுதியில் நேற்றுக் காலை 8 மணி அளவில் ஹெலியில் இருந்து தொடர்ச்சியாக கலிபர் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதேவேளை—

பரந்தனுக்கும் ஆனையிறவுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் இரவு வேளைகளில் திடீர் திடீரென விமானத் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.

கடந்த புதன் இரவு வீசப்பட்ட குண்டுகளினால் கிளிநொச்சிப் பகுதி எங்கும் அதிர்ந்து குலுங்கியது

## பலாலி ஷெல்

பலாலி முகாமில் இருந்து புதனன்று மாலை 5.30 மணியளவில் ஏவப்பட்ட ஷெல்கள் பொன்னாலை, தொல்புரம், கல்லுண்டாய் ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன.

தொல்புரம் பத்தானைக் கேணியடிப் பகுதியில் ஆலமரத்தின் மீது ஷெல் விழுந்து வெடித்து அம்மரத்தின் கிளைகள் முறிந்து எரிந்தன என்றும்—

எனினும் அம்மரத்தின் கீழ் நின்ற இருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பிக் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-100)

பங்கதனும் உனக்கிலையோ?

தங்க வடிவேலவனே! தனியழகே! நல்லூரா!
சங்கத்தமிழ் வளர்க்கச் சண்முகனே நாடிவாய்
பங்கதனும் உனக்கிலையோ? பார்வையினைக்
காட்டியருள்
சங்கங்கே முழங்கும் சரவணபவனே என்று.

# தமிழீழ தாயகத்துக்கே கிட்டு செல்ல விருப்பம்

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. கிருஷ்ணகுமார் கிட்டு தமது தாயகமான தமிழீழத்திற்கே திரும்பிச் செல்ல விரும்புகிறார்.

இவ்வாறு லண்டனில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் திரு. அன்ரன் ராஜா பி.பி.ஸி.க்குத் தெரிவித்துள்ளார்.

திரு. கிட்டு நோர்வே, சுவீடன், சுவிற்சர்லாந்து போன்ற ஏதேனும் ஐரோப் நாடுகளில் ஒன்றில் தற்போது தங்கி இருக்கலாம் என்றும் திரு. ராஜா கூறினார்.

## ★ வருமானம் குறைந்தோர்

## ★ தொழில் இழந்தோர்

# பொருள்களுக்கு அதிகவிலை செலுத்த வேண்டிய நிலை

யாழ்ப்பாணம், ஆக. 31

இராணுவ நடவடிக்கைகள் காரணமாகத் தொழில் இழந்தவர்களுக்கும், 1.500 ரூபாவுக்கும் குறைந்த மாத வருமானம் உடையவர்களுக்கும்,—

நாளை ஞாயிறு (முதலாம் திகதி) தொடக்கம், கட்டுப்பாட்டு விலையையும் விட அதிக விலை கொடுத்தே தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை வாங்குவதற்குநிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்சொன்ன இரு சாரார்களுக்கும் கடந்த மாதம் வரை இலவசமாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டது.

ஆனால் அரசாங்கத்தின் புதிய முடிவினால் இவர்களுக்கு இலவச உலர் உணவு வழங்குவது நிறுத்தப்பட்டுவிட்டது. இனிமேல் இவர்கள் உணவுப் பொருள்களை ப. நோ. கூ. சங்கங்களிலே கொள்வனவு செய்ய வேண்டியதாகவுள்ளது.

ப. நோ. கூ. சங்கங்கள் கட்டுப்பாட்டு விலையுடன் போக்குவரத்துச் செலவையும் சேர்த்தே பொருள்களை விற்கப்போகின்றன. அதனால் தொழில் இழந்த நிலையிலும், வருமானம் குறைந்த நிலையிலும் அளவுக்கதிகமான விலை கொடுத்தே உணவுப் பொருள்களை வாங்க வேண்டிய நிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது (அ-5)

## சோவியத் முழுவதும் கம்யூ. கட்சிக்கு தடை!

மொஸ்கோ, ஆக. 31

நாடு முழுவதிலும் கம்யூனிஸ்ட் கட்சி நடவடிக்கைகளைத் தடைசெய்வது என்று சோவியத் நாடாளுமன்றத்தின் உயர்சபை தீர்மானித்துள்ளது.

இது சம்பந்தமான தீர்மானம் உயர்சபையின் (சுப்ரீம் சோவியத்) கூட்டத்தில் 283 — 29 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க ஜனாதிபதி கோர்பச்சேவுக்கு ஓராண்டுக்கு முன்னர் வழங்கப்பட்ட விசேட அதிகாரங்களை வாபஸ் வாங்கும் பிரேரணை ஒன்றையும் உயர்சபை நிறைவேற்றியது. (ஒ-எ)

## 24 குற்றச்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொலைபேசிகளை ஒட்டுக் கேட்டது.

★ ஜனநாயக விரோதமாக, தனிமனித சர்வாதிகார ஆட்சியைப் புரிய விழைந்தமை.

★ மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமை.

ஆகியவை உட்பட பல குற்றச் சாட்டுகள் சுமத்தப் பட்டிருக்கின்றன. [உ-த-எ]

## இப்போது...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவர் நேற்று உரையாற்றினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தீவிரவாதக் குழுக்களை 3 வருடங்களுக்கு முன்னரே அழைத்திருந்தேன்.

விடுதலைப் புலிகள் தவிர, மற்றைய இயக்கங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்டன — என்றார் அவர்.

''அப்பாவிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திசை திருப்பி, சில சக்திகள் அரசுக்கு எதிராக சதி செய்துள்ளன. ஜனநாயக நடைமுறையில் இவை சாவசாதாரணமான விடயம். இதற்காக யாரும் பதற்றப்படத் தேவையில்லை — என்றார் அவர். (உ-த-3)

## வீரவணக்கம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விழுப்புண்பட்டு வைத்திய சிகிச்சை பெற்று வந்துவிடுதலைப் புலிகள்இயக்கப் போராளியான றோய் (சொக்கலிங்கம் மதிவதனன் — முல்லைத்தீவு) வியாழன் காலை வீர மரணம் அடைந்தார்.

★ ★ ★

ஆனையிறவுப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் முகமது (விநாயகம் ஜெயபரன் — பளை) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார். (உ)

## பெஜிங் அரசு மறுப்பு

பெஜிங், ஆக. 30

சீனத்தலைவர் டெங்ஷியா-பிங் மற்றும் பிரதமர் லீ. பெங் ஆகியோர் மரணமடைந்துவிட்டனர் என்று அண்மையில் வெளியான தகவல்களை பெஜிங் அரசு உத்தியோகபூர்வமாக மறுத்துள்ளது. (த-எ)

## திலீபன் நினைவு தட, கள விழா கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக. 31

முன்னர் நடைபெறுவதாக இருந்து பின்போடப்பட்ட தியாகி திலீபன் நினைவு தட, களவிழா விரைவில் நடைபெற உள்ளது.

இந்த விழா தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, யாழ். மாவட்டச் செயலகத்தில் பெறும்.

இதில் சகல விளையாட்டு உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், வட்டவை விளையாட்டுப் பொறுப்பாளர்கள் ஆகியோர் தவறாது சமுகம் கொடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

வட்டவை விளையாட்டுப் பொறுப்பாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட சகல விண்ணப்பப் பத்திரங்களையும் கொண்டு வருமாறு கோரப்பட்டுள்ளது. [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கு

விடயம்: சோவியத் யூனியனின் அரசியல் மாற்றம்.
இடம்: புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
காலம்: 01 - 09 - 1991 பி. ப. 2 - 30
தலைமை: க. குணராஜா (செங்கை ஆழியான்)
கருத்துரை வழங்குநர்: அ. குமாரவேலு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (சி/0426)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 12 - 1 - 1905



மறைவு: 2 - 8 - 1991

அமரர்
### காளியப்பர் முருகுப்பிள்ளை

ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய எம்மோடு உற்றார், உறவினர்களும் ஊர் மக்களும் பிரார்த்திக்கிறார்கள்.

01 - 09 - 1991 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

நாகலிங்க முதலியார் வீதி, பருத்தித்துறை. [17965]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



வீர ஜனனம்: 16 - 12 - 1971

வீர மரணம்: 19 - 7 - 1991

### வீர வேங்கை நிதி
[சோமநாதன் நித்தியானந்தமூர்த்தி]

உள்ளத்தால் இணைந்த உடன் பிறப்பே! அன்பினால் அரவணைத்த என் ஆசைத் துரையே! பாசத்தால் பதைக்கின்றேன். உன் முகம் காணாமல், தாயகத்தை மீட்க நீ மணலாற்றுக் களத்திற்குச் சென்ற வேளை, ஐயா! நீ கொடியவனின் கொடுமையால் சிலையானாய் தம்பி!

[துரையே உமது நினைவுகள் எம் வாழ்வு உள்ளவரை எந்தி நிற்போம்]

உமது பிரிவால் ஏங்கி நிற்கும்:

எஸ். விக்கினேஸ்வரன் [அத்தான்], செல்வா [அக்கா], துவாரகன் [மருமகன்]

[17583]

## நீளம் பாய்தலில் உலக சாதனை!

டோக்கியோ, ஆக. 31
நீளம் பாய்தலில் கடந்த 23 ஆண்டுகளாக இருந்து வந்த உலக சாதனை நேற்று முறியடிக்கப்பட்டது.

அமெரிக்காவைச் சேர்ந்த மைக் பவல் 8·95 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டினார்.

பாப் பீமன் என்பவர் 1968 இல் 8·90 மீற்றர் தூரம் பாய்ந்து நிலைநாட்டிய சாதனையே நேற்று முறியடிக்கப்பட்டது.

உலகின் அதிவேக ஓட்டக்காரர் என்ற சாதனையை கடந்த வாரம் நிலைநாட்டிய கார்ல் லூயிஸ் இந்தப் போட்டியில் 8·91 மீற்றர் தூரம் பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பெற்றார். [உ-த]

## ஆனையிறவில் மோதல்!

யாழ்ப்பாணம், ஆக. 31
ஆனையிறவு முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வெளியேறி, புலிகளின் காவலரண்களை நோக்கி முன்னேற முயன்ற படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து படையினர் முகாமுக்கு பின்வாங்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பிரேமதாஸா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
சொன்னார்.

திரு. பிரேமதாஸாவைப் பதவியில் இருந்து நீக்குவதற்குத் தேவையான பெரும்பான்மை ஆதரவைத் தம்மால் திரட்ட முடியும் என்றும் அவர் கூறினார்.

திரு. காமினி திஸாநாயக்கா கருத்து வெளியிடுகையில்—

''ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாகச் செயற்பட திரு. பிரேமதாஸா அனுமதிக்க வில்லை'' —என்று குற்றம் சுமத்தினார். [உ-த]

## நாடாளுமன்ற...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கூட்டத் தொடரை செப்டெம்பர் 25ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கும் பிரகடனத்தைத் திடீரென விடுத்தார்.

திரு. பிரேமதாஸாவின் இந்த அறிவிப்பு அவர் இந்தப் பிரச்சினையை விவேகத்துடன் கையாளுகின்றார் என்பதையே தெளிவுபடுத்துவதாக அரசியல் விமரிசகர்கள் கருத்து வெளியிட்டனர். (உ-த)

## அதிருப்தி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
குழுவை இந்தியா தூண்டிவிட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் இந்திய ஆதரவுக் கொள்கையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை திரு. பிரேமதாஸா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில், அவர் நட்பு நாடுகளைப் புறக்கணித்தார் என்பதும் ஒன்றாகும். (உ)

## தவறான திகதி

நல்லூர், செட்டித்தெரு, 10ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திருமதி கு. தைரியலக்ஷ்மி குமாரசுவாமி கடந்த 29-6-91 கொழும்பில் காலமானார்.

நேற்றைய உதயனில் வெளிவந்த மரண அறிவித்தலில், அன்னார் 29-8-91 இல் காலமானதாகத் தவறு [illegible]

## இலங்கை பல்கலைக்கழகங்களிற்கான வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
### கல்வியாண்டு 1991/1992

யாழ்ப்பாண, பேராதனை பல்கலைக்கழகங்களிற்கான
கலை முதற் தேர்வு - G. A. Q.
வணிக முதற் தேர்வு - 1st In Com.
ஆகிய தேர்வுகளிற்கான பதிவுகள் 01 - 09 - 1991 முதல் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

க. பொ. த. பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

சிரேஷ்ட பதிவாளர்,
**விக்னா கல்வி நிலையம்,**
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

மு. குறிப்பு: பட்டப்படிப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த எமது நிறுவன விரிவுரையாளர்களும், College of Higher Studies, Anaipanthy விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்த சேவை. [சி-0410]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### சிவசாமி பொன்னுத்துரை
(''மான்குட்டி'')

தோற்றம்: 01 - 01 - 1917 மறைவு: 13 - 09 - 1990
திதி: 01 09 - 1991

பாசத்தின் ஒளியாய் ஒளிர்ந்த எம் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மாமியார்.

''அம்பிகை பவனம்'', பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. (17983)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பார்வதவர்த்தனி (விசாலாட்சி) வேலுப்பிள்ளை

பார்வதவர்த்தனி அவர்கள் சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற ச. வேலுப்பிள்ளை ஆசிரியரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு, தையல்நாயகி, கனகசபாபதி, வேதநாயகி ஆகியோரின் சகோதரியும், பத்மநாதன் [இளைப்பாறிய விவசாயத் திணைக்கள லிகிதர், கிளிநொச்சி], தில்லைநாதன் [கனடா], மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புத் தாயாரும், கல்வயல் குமாரசாமி, கௌரி, சத்தியபாமா [கனடா] ஆகியோரின் மாமியாரும், பாலகுமாரன், இரமணன், பிரமிந்தன், சுகந்தினி, அனுசுயா, இரம்யா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [31-8-91] சனிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி பெரிய அரசடியில் நடைபெறும்.

பெரிய அரசடி, சாவகச்சேரி. [17687] தகவல்: குடும்பத்தினர்

### பொன்னையா தன்மாவரதர்

[இளைப்பாறிய அநுராதபுரம் புகையிரதக் கட்டுப்பாட்டு நிலைய பிரதம கட்டுப்பாட்டு அதிகாரி]

கைதடி வடக்கைச் சேர்ந்த தன்மாவரதர் 27-08-1991 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னையா தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன் [கணக்காளர், லங்கெம் லிமிட்டெட்], பாலகுமாரன் [கணக்காளர், துரைராஜா அசோசியேற் பிறைவேற் லிமிட்டெட்], பாலதயாளன் [தொழில்நுட்பவியலாளர், ருபவாஹினி கூட்டுத்தாபனம்], பாலராஜன் [அமெரிக்கா], சீதாலட்சுமி, பாலேந்திரன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சகுந்தலாதேவி, சுலோஜனா ஆகியோரின் மாமனாரும், சுதர்சன், ஜெனனி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 31-08-1991 [இன்று] சனிக்கிழமை மாலை 3 மணியளவில் கைதடி வடக்கில் உள்ள ஊத்தல் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சீதா பதி, கைதடி வடக்கு, கைதடி. (17987) த. பாலகுமாரன் [மகன்]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org